# நாணயம் செய்திமடல்

## ( உள் சுற்றுக்கு மட்டும் )

மலர் : 1 இதழ் : 2

**அரசியல் மற்றும் சமயம் சாரா**

**கிராமிய வளர்ச்சிப்பணித் தகவல் மடல்**

**(பெண் வன்முறைகளுக்கு எதிரான சிறப்பு மலர் )**

ஆசிரியர் : திருமிகு. **பொற்கொடி,**

ஆசிரியர் குழு உறுப்பினர்கள் : திருமிகு.எர்ஸ்கின், திருமிகு.சந்தனமாரி, திருமிகு.ராஜேஸ்வரி, திருமிகு. நிர்மல் ராஜா

அன்பான வாசகர்களே,

ஆசிரியர் குழுவின் சார்பாக வணக்கங்களும், வாழ்த்துக்களும் ! கடந்த இதழில் பெண்குழந்தைகள் பஞ்சாயத்து நிர்வாக அமைப்பு, தேர்தல் முறை, முந்தைய பஞ்சாயத்து அமைப்புகளின் சாதனைகள் , கிராம சபை ஆகியவற்றை அறிந்து கொண்டோம். இம்மடல் பெண்களின் வன்கொடுமைகளுக்கு எதிரான சிறப்பு மலராக வெளியிடுவதில் மகிழ்வடைகின்றேன்.

"**மங்கையராய் பிறப்பதற்கே நல்ல**
**மாதவம் செய்திடல் வேண்டுமம்மா**" என்று ஓர் கவிஞன் பெண்களை போற்றி பாடியுள்ளான். மேலும் " **ஆணும் பெண்ணும் சரிநிகர் சமானமாய் வாழ வேண்டும்**" என்று ஆன்றோர்களால் கூறப்பட்டு வந்தாலும் பெண்களுக்கு எதிராக இழைக்கப்படுகின்ற வன்கொடுமைகள் கிராமந்தொடங்கி நகர் வரைக்கும் நடந்து கொண்டுதான் உள்ளது.

" **பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்**
**பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்** " என்ற பாரதியின் சொற்களுக்கு வடிவமாய், புதுமைப்பெண்களாய் முன்னேற்றப்பாதையில் கை கோர்த்து நடந்து
" **இணைந்த நாங்கள் இமயம் அடைவோம்**" என்ற இலக்கை அடைய வாழ்த்துகிறேன். பெண் சமுதாயமாக இணைந்த நாம் பெண்களுக்கான விழிப்புணர்வு, கடன் வசதி, பொருளாதார முன்னேற்றம், கிராம

மேம்பாடு போன்றவற்றில் ஈடுபட்டு பலமடைந்துள்ளோம். பெண்கொடுமைகளுக்கு குரல்கொடுக்க வன்முறையை வேரறுக்க பூகம்பமாய் புறபட்டு விட்டோம் மாவட்ட கூட்டமைப்பாய். இனி பெண்களுக்கு "விடிவது புது உலகம் தான் ". தொடரட்டும் உங்களின் சாதனைகள் இமயம் மட்டும்.

நட்புறவுடன்

த.பொற்கொடி

ஆசிரியர்

..................................................................................................(1) ..................................................................................................................................

சிந்தனைக்கு ............

ஒருவரை

வாய்ப்பு தேடி வந்தால் – அதிஷ்டசாலி

ஒருவர்

வாய்ப்பை தேடிசென்றால் – புத்திசாலி

ஒருவர்

வாய்ப்பு கிடைக்கவில்லை என்றால் – ஏமாளி

ஒருவர்

வாய்ப்பு கிடைத்தும் பயன்படுத்தவில்லை என்றால் – கோமாளி

**பெண்களின் 5 சிறப்புக்கள்**

**பிறப்பு**

**படிப்பு**

**ஈர்ப்பு**

**ஏற்பு**

**இறப்பு**

..................................................................................................................................................................................

பெண்களுக்கெதிராக இழைக்கப்படும் வன்கொடுமைகளை கையாளுவதில் பெண்கள் அமைப்புகள் : திருமிகு. சந்தனமாரி, குழுத்தலைவர்,

பாலியல் முன்னேற்ற திட்டம்

" குற்றங்கள் பற்றிய தேசிய தகவல் அறிக்கையில் 51 நிமிடங்களுக்கு 1 பெண் பாலியல் தொல்லைக்கு உள்ளாகிறாள் என்ற புள்ளிவிபரம் கொடுக்கப்பட்டுள்ளது. இது வேறங்குமில்லை நமது தாய்த்திரு நாட்டில்தான். பாலியல் கொடுமைகள் வயது வித்தியாசமில்லாமல், ஜாதி, மத, கட்சி பேதமில்லாமல் செவ்வனே செயல்படுத்தப்படுகின்றது. 4 வயது குழந்தையை 57 வயது கிழவன் பாலியல் பலாத்காரம் செய்வதும் 70 வயது மூதாட்டியை 22 வயது இளைஞன் மிருகத்தனமாய் உட்லுறவு கொள்வதும் 16 வயது சிறுமியை 4 காமக்கொடூரன்கள் அரக்கத்தனமாய் " கேங் ரேப்" செய்வதும் விருதுநகர் மாவட்ட பாலியல் வன்கொடுமைகள் அன்றாடம் அரங்கேறும் பெண்களுக்கெதிரான வன்முறைகளை இனம் கண்டு, பிரச்சினையை அலசி ஆராய்ந்து, பிரபல்யப்படுத்தி, ஒருங்கிணைந்து குரல் கொடுக்க அமைப்புகளை ஊக்கப்படுத்தி, மனம் மற்றும் சட்ட ரீதியான ஆலோசனை வழங்கி பெண்களின் மனச்சுமையை குறைப்பதே ஸ்பீச் பெண்கள் அமைப்புகளின் நோக்கமாகும்.

இதனையொட்டி பாலியல் வன்கொடுமையால் பாதிக்கப்படுகின்ற பெண்களுக்கு பிரச்சினைகளை மனம் விட்டு பேசும் பகிர்வுதளமாக செயல்படுகின்றது கிராம அளவில் பெண்களால் உருவாக்கப்பட்ட நாணயக்குழுக்கள். தனி நாணயக்குழுக்களுக்களில் கண்டறியப்பட்ட பாலியல் கொடுமைகள் அடுத்த நிலையிலுள்ள கிராம அளவிலான கூட்டமைப்புக்கு ( கூஷிலிதி ) எடுத்து செல்லப்படுகின்றது. அங்கிருந்து ஸ்பீச் – பெண்கள் ஆலோசனை மையத்திற்கு பாதிக்கப்பட்ட பெண்ணை கிராம அளவிலான கூட்டமைப்பு பிரதிநிதிகள் அழைத்து செல்கின்றனர். ஆலோசனை மையத்தில் பகுதி அளவிலான கூட்டமைப்பின் உறுப்பினர்களோடு கலந்து பேசிய பின்பு தேவையின் அடிப்படையில் ( மகளிர் ) காவல் துறைக்கும், சட்டத்துறைக்கும் சட்ட ஆலோசகரின் உதவியோடு பிரச்சினை எடுத்துச் செல்லப்பட்டு தீர்வு காணப்படுகின்றது. காவல் துறைக்கு செல்ல அவசியமில்லாத பிரச்சினைகளுக்கு சம்பந்தப்பட்ட நபர்கள் நேரில் குழுவாக வரவழைத்து கடுமையாக எச்சரிக்கப்பட்டு அனுப்பப்படுகின்றனர். பகுதி அளவிலான கூட்டமைப்பு தான் மட்டும் தனியாக பாலியல் பிரச்சினைகளை கையாளாமல் ஸ்பீச் ஏற்படுத்தியுள்ள கிராம வளர்ச்சிக்கான சங்கங்களின் கூட்டமைப்பு என்ற மக்கள் அமைப்பின் உதவியையும் வழிகாட்டுதலையும், ஒத்துழைப்பையும் தேவையினடிப்படையில் பெற்று பிரச்சினைகளை கையாளுகின்றது.

- பெண்களின் வன்கொடுமைகளை கையாள சட்ட ஆலோசகர் பிரதி மாதம் கடைசி சனிக்கிழமையன்று வருகை தருகின்றார்.

- பெண்களின் மனச்சுமையை குறைப்பதற்கு மனோதத்துவ நிபுணர் மாதமொரு முறையும், தேவையினடிப்படையில் பலதடவைகளும் வருகை தருகின்றார்.
- மூன்று மாதமொரு முறை மகளிர் காவல் நிலையை அதிகாரிகள் பாலியல் முன்னேற்றத்திட்ட பயிற்சிகளில், பயிற்றுனராக கலந்து கொள்கின்றனர்.
- மாதமொருமுறை பகுதி அளவிலான கூட்டமைப்புக்கூட்டமும், மாவட்ட அளவிலான பெண்கள் கூட்டமைப்பு கூட்டமும் நடைபெறுகின்றது.

பெண்களை பாதிக்கும் பாலியல் கொடுமைகளுக்கு எதிரான நடவடிக்கை மற்றும் வழிகாட்டுதலுக்கு நீங்கள் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

ஸ்பீச் – பெண்கள் ஆலோசனை மையம்
காரியாபட்டி ரோடு, திருச்சுழி – 626 129
விருதுநகர் மாவட்டம்
தொலைபேசி : 04566 – 282 360



**புதுமைப்பெண் பொன்னாளம்மாள்**

**( பள்ளிமடம், திருச்சுழி )**

பொன்னாளம்மாள், தில்லை நடராஜன் தம்பதியினர் திருச்சுழியை அடுத்த பள்ளிமடம் கிராமத்தில்வாழ்ந்து வந்த 70 வயது நிரம்பிய முதியவர்கள், குழந்தைகள் இல்லாத காரணத்தால் தாங்களே ஒருவருக்கொருவர் குழந்தைகளாய் ஒற்றுமையுடன் வாழ்ந்தனர். ஊர் பூசாரியாக தில்லை நடராஜன் பணிகளை மேற்கொள்ளும்போது பொன்னாளம்மாளே அவருக்கு அனைத்து பணிகளையும் பொறுப்பேற்று செய்வார். ஊர் கண்ணுக்கு இவர்களின் அன்பு, பாசம், ஒற்றுமை வியப்பூட்டுவதாகவே இருந்தது. இணைபிரியா அத்தம்பதி தங்களுக்கிருந்த ஜாதீய, கலாச்சார சமுதாயக்கட்டுப்பாடுகளை கண்டு கொள்ளவில்லை. அவர்களுக்குள்ளே எழுதப்படாத ஒப்பந்தம் ஒன்றிருந்தது. அதுதான் "**யார் முன் இறக்கின்றார்களோ அவர்களுக்கு அடுத்தவர் ஈமக்கிரியை செய்ய வேண்டுமென்பது.**" இது மற்றவர்களுக்கு வியப்பாய், விளையாட்டாய் தோன்றினாலும் தாங்கள் ஒத்துக்கொண்ட சபதத்தில் தீர்க்கமாய் இருந்தனர். அம்மப்திப்பிற்குரிய தம்பதியர். இவர்களிடையே ஒத்துக்கொண்ட காரியத்தின் உறுதியை பரிசோதிக்க இறைவன் வாய்ப்பளித்தான். தில்லை நடராஜன் காலமானார். அவர்களுக்கிருந்த சொத்துக்களை அபகரிக்க காக்கை கூட்டமாய் சொந்தங்களும் பந்தங்களும் ஒன்று திரண்டனர். நடராஜன் – பொன்னாளம்மாள் தம்பதி தனிமரமாய் நின்ற போது திரும்பிக் கூட பார்க்காத உறவுகள் ஈமக்கிரியை

செய்வதில் போட்டா போட்டி போட்டு நின்றன, ஏனென்றால் குழந்தையில்லாதவருக்கு ஈமக்கிரியை செய்பவருக்கு அவர்களின் சொத்துக்கள் போய் சேர வேண்டுமென்பது சம்பிரதாயம். அதை அடைய வேண்டுமென்பதைத் தவிர வேறொரு நோக்கம் இல்லை. இதையறிந்த பொன்னாளம்மாள் தம் ஊரில் இயங்கி வரும் பள்ளிமடம் நாணயக்குழுவையும், கிராம அளவிலான கூட்டமைப்பையும் அணுகி தன் கணவர் உயிரோடிருந்த போது உளமாற ஏற்றுக்கொண்ட ஒப்பந்தத்தைக் கூறி உறவினர்களின் செயல்களுக்கு மறுப்புத் தெரிவித்தார். சொத்துக்கள் போவதை தாண்டி தன் உணர்வுகளுக்கு மதிப்பளிக்க வேண்டினார். நாணயக்குழு உறுப்பினர்கள் தில்லை நடராஜன் பூத உடல் எரியூட்டுவதற்கு முன்பு நடக்க வேண்டிய சம்பிரதாயங்களை பொன்னாளம்மாவே செய்ய சொன்னார்கள். ஜாதீய கட்டுப்பாடுகள் ஒருபுறம் மதக்கட்டுப்பாடுகள் மறுபுறம் அதனையும் தாண்டி பால்ரீதியான கட்டுப்பாடுகள் ஒட்டுமொத்தமாய் தாக்க, தளராத அமைப்பினர் பொன்னாளம்மாளின் உணர்வுகளுக்கு, விருப்பத்திற்கு சமுதாயம், குடும்பம், மதிப்பளிக்க வாதிட்டு வென்றது.

ஓர் பெண் மயானத்திற்கு சென்று ஈமக்கிரியை செய்தது இப்பகுதிக்கே முதல் மாதிரியாய் அமைந்து விட்டது.

இப்ப சொல்லுங்க

ஜாதி

மத

கலாச்சார

பால் ரீதியான கட்டுப்பாடுகளை தகர்த்து தவிடு பொடியாக்கின பொன்னாளம்மாள் புரட்சிக் கவிஞன் பாரதி கண்ட **“புதுமைப்பெண் தானே”**.

ஏன் நீங்களும் புதுமைப்பெண் ஆகக்கூடாது???

சிந்தியுங்கள்! செயல்படுங்கள்!!

நிகழ்வறிக்கை தயாரிப்பு
**கலைச்செல்வி**, பள்ளிமடம்